# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(26.10.2022 முதல் 30.10.2022)

**அறிக்கை எண்: 86/2022** **தேதி: 25.10.2022**

### கரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 °செ முதல் 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (26.10.2022 முதல் 30.10.2022)

| கடந்த வார வானிலை (21.10.2022 முதல் 24.10.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (26.10.2022 முதல் 30.10.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 21/10 | நாள்-2 22/10 | நாள்-3 23/10 | நாள்-4 24/10 | தேதி | நாள்-1 26/10 | நாள்-2 27/10 | நாள்-3 28/10 | நாள்-4 29/10 | நாள்-5 30/10 |
| 24.8 | 4.8 | 6.2 | 0.0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 4 |
| 33 | 30 | 31 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 33 | 33 | 31 | 31 |
| 24 | 24 | 24 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 21 | 20 | 20 | 21 | 21 |
| 7 | 7 | 6 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 4 | 5 | 6 |
| 87-82 | 87-78 | 87-67 | 84-60 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-55 | 70-55 | 70-55 | 70-60 | 75-60 |
| 8 | 7 | 12 | 9 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 4 | 4 | 4 |
| கிழக்கு | கிழக்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட வட மேற்கு | வட வட மேற்கு | வட மேற்கு |

### கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 30.10.2022 அன்று இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 °செ முதல் 343 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20 °செ முதல் 21 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவும் தட்பவெப்பநிலையில் பயிர் ஊட்டசத்து பற்றாகுறையினால் ஏற்படும் குன்றிய நெற்பயிர் வளர்ச்சியினை நிவர்த்தி செய்ய உடனடியாக பொட்டாஷ் உரத்தினை மேலுரமாக ஏக்கருக்கு 8.5 கிலோ இடவும் மற்றும் 0.5 சதம் சிங்க்சல்பேட் உரத்தினை தெளிப்பாக நெற்பயிறுக்கு அளிக்கவும் |
| நெல் | | தாளடி பருவத்திற்கு மத்திய கால இரகங்களான ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஐ.ஆர். 20, அம்பை 19, பையூர் 1, திருச்சி 1, திருச்சி 3, கோ 48, கோ 49 மற்றும் கோ 50 ஆகியவை சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது. |
| கால்நடைகளுக்கு | மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**